# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>காரைநகர் படகுத்தள புனரமைப்புக்காக</u>**
**<u>இந்தியா – இலங்கை இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து</u>**

இந்திய அரசாங்கத்தின் 290 மில்லியன் இலங்கை ரூபா நன்கொடை நிதி உதவியின் கீழ் இலங்கையின் வட மாகாணத்தில் உள்ள காரைநகர் படகுத்தளத்தினை புனரமைப்புச் செய்வதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா மற்றும் இந்தியாவுக்கான இலங்கையின் அப்போதைய உயர் ஸ்தானிகர் கௌரவ ஷேனுகா திரேனி செனவிரத்ன ஆகியோரால் 2024 டிசம்பர் 16 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டு பரிமாறிக் கொள்ளப்பட்டது.

2. நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் இணைக்கப்பட்டு மீன்பிடி, நீரியல் மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் Cey-Nor Foundation Ltd நிறுவனத்தின் கீழான குறித்த படகுத் தளத்தின் புனரமைப்பு திட்டமானது சிவில் வேலைகள், மற்றும் ஆலை, இயந்திரங்கள், உபகரணங்கள், மூலப்பொருட்கள், சேவைகள் போன்றவற்றை நிறுவுதல் உள்ளிட்ட கொள்முதல் செயற்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். புனரமைக்கப்பட்ட படகுத் தளம் முழுமையாகச் செயற்பட்டதுடன் அதனை அடிப்படையாக வைத்து உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரம் அதிகரிப்பதுடன் அப்பகுதியில் உள்ள சிறிய நிறுவனங்கள் ஊடாக அதிகளவான வேலை வாய்ப்புகளும் உருவாகும். இப்படகுத் தளமானது தரமான மீன்பிடி உற்பத்திகளின் விநியோகத்தை மேம்படுத்தவும் உதவுகிறது.

3. இலங்கைக்கான 5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான அபிவிருத்தி ஒத்துழைப்பு ஊடாக மக்களை இலக்காகக் கொண்டு சகல துறைகளிலும் முன்னெடுக்கப்படும் இந்திய அபிவிருத்தி உதவித் திட்டங்கள் நாடளாவிய ரீதியில் 25 மாவட்டங்களிலும் உள்ள சகல இலங்கை மக்களினதும் நாளாந்த வாழ்வில் உறுதியான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. வடக்கில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களில் 41000 வீடுகள், யாழ்ப்பாணத்திலுள்ள அதி நவீன கலாசார நிலையம், காங்கேசன்துறை துறைமுக சிதைவுகள் அகற்றல் மற்றும் அகழ்வு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் பாடசாலைகள் மற்றும் மருத்துவமனைகளின் நிர்மாணம் மற்றும் புனரமைப்பு, திருக்கேதீஸ்வரம் ஆலய புனருத்தாரணம், விவசாய சமூகத்துக்கான கணிசமான உதவிகள் மற்றும் மீனவ சமூகத்துக்கான் படகுகள், வலைகள், வெளியிணைப்பு மோட்டார்கள், குளிரூட்டிகள் போன்ற உதவிகள் உள்ளிட்ட உதவித்திட்டங்களை முக்கியமானவையாகக் குறிப்பிட முடியும்.

************

**கொழும்பு**
**02 ஜனவரி 2025**